முருகப்பெருமான் துணை

**மகான் ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**30.09.2023**, சனிக்கிழமை

1. தவசியே ஆறுமுக அரங்கனே
   தன்னார்வத் தொண்டர் படைகளை
   அவனியில் உருவாக்க வேண்டி
   அவதாரம் எடுத்துவந்த தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
   ஆசிதனை சோபகிருது தரிவை திங்கள்
   அய்யமற முன்னான்கோர் திகதி காரிவாரம்
   (சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 13ம் நாள், 30.09.2023, சனிக்கிழமை)
3. வாரமதில் ஐயடிகள் காடவர்கோன் நாயனாரும்
   வழங்குவேன் உலகநலம் பெற
   சோரமில்லா ஞான உலகம் படைக்க
   சுத்தநெறி காட்டி அருளுகின்ற
4. அருளுகின்ற அரங்க மகானின்
   ஆற்றல்மிக்க ஞானவழிகளை
   வரமாக மக்களெல்லாம் ஏற்று
   வணங்கியே ஞானம் பயில
5. பயிலவே பிசகின்றி யாவருக்கும்
   பரிபக்குவமுடன் கூடிய நல்
   தயவும் தருமசிந்தைகளும் பெருகி
   தவராஜன் அன்னதான சேவை கலந்து
6. கலந்துமே தொண்டாற்றியே
   கண்ணியமிக்க தன்னார்வ
   பலம்மிக்கவர்களாகச் சிறந்து
   பாருலகில் அரங்கமகான் ஆசிபட

7. ஆசிபட ஞானவான்கள் எனும்
அடையாளமுடன் உலகமாற்றத்தில்
நேசமுடன் அற்புதம் படைப்பர்
நிலவுலகில் ஞானிகள் பூசை
8. பூசைதனை மக்களெல்லாம்
பின்பற்றிச் செய்து வரவர
தேசமெங்கும் ஞானிகள் பலம்
தெய்வீக வெளிப்பாடாக உருவாகி
9. ஆகியே எங்கும் மக்களிடை
ஆறுமுகனாரின் வழிபாடு
வகைபட சரவண சோதி
வழிபாடாகச் செய்து நன்கு
10. செய்துமே எங்கும் ஞானம்
சிறப்பறிவாகப் பரவி நின்று
மெய்ஞானவான்களாகச் சிறந்து
முன்னேறுவர் ஞானிகளாக
11. ஆகவே மாற்றம் கண்டிட
அகிலம் ஞான பலமுமாகி
செகமே ஞானயுகம் ஆகும்
சிறப்பான ஞான ஆட்சியாக மலரும்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–